சுருக்கம்

மீன்துறை – கடல் மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் – மீன்பிடிப்புத் தொழில் மற்றும் மீன்பிடி தொழில் சார்ந்த பணிகளில் ஈடுபட்டிருக்கும் கடல் மீனவ மகளிர்களுக்கு 2007–08ம் ஆண்டில் நிவாரணத் தொகை வழங்குதல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(மீன்.3) துறை

அரசாணை (டி) எண்.275 நாள்: 19.9.2007

படிக்க:

1. அரசாணை (டி) எண்.13 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(மீன்3)துறை, நாள் 7.9.2006.
2. அரசாணை (டி) எண்.68 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(மீன்3)துறை, நாள் 20.3.2007.
3. அரசாணை (டி) எண்.114 கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்(மீன்3)துறை, நாள் 2.5.2007.

மேலும் படிக்க

4. மீன்துறை இயக்குநர் கடித எண். 56440/ஜே2/2006, நாள் 8.5.2007.

.....

ஆணை:

மைய அரசால் செயல்படுத்தப்படும் தேசிய மீனவர் நலத் திட்டத்தின் (Centrally Sponsored National Scheme of Welfare of Fishermen) மூன்று அங்கங்களில், சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம் ஓர் அங்கமாகும். மைய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி இத்திட்டத்தின்கீழான பயனாளி மீனவரிடமிருந்து 8 மீன்பிடி மாதங்களில் ஒவ்வொரு மாதமும் ரூ.75/-- வீதம் மீனவர் சந்தா தொகை ( Subscription ) வசூலித்து அரசு கணக்கில் சேர்க்கப்படும். எட்டு மாத முடிவில் சேரும் தொகை ரூ.600/-- உடன் மைய மாநில அரசுகளின் பங்குத் தொகையாக ரூ.600/– மாக மானிய உதவித் தொகை அளித்து (50:25:25 பங்களிப்பு) நிகிரத் தொகையான ரூ.1200/–ஐ மீனவர்கள் மீன்பிடிப்பதற்கு செல்ல இயலாத நான்கு மாதங்களுக்கு மாதம் ரூ.300/– வீதம் பயனாளிகளுக்கு விநியோகிக்கப்படும்.

2. இத்திட்டத்தின்கீழான மைய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளின்படி, மீனவ பயனாளியானவர் பின்வரும் அடிப்படைத் தகுதிகள் பெற்றிருக்கவேண்டும்.

I முழு நேர மீன்பிடி தொழிலில் ஈடுபட்டவர்
Ii மீனவர் கூட்டுறவு சங்கத்திலோ / இணையத்திலோ / நலச்சங்கத்திலோ உறுப்பினர்
Iii 60 வயதுக்கு மேலும் / வறுமை கோட்டிற்குக் கீழும் உள்ளவர்.
iv சொந்த மாக இயந்திரப்படகோ / கரையேற்றப் படகோ இல்லாதவர்
மீனவரின் குடும்ப உறுப்பினர் எவரேனும் நிரந்தரமாக வருமானம் ஈட்டக்கூடிய தொழில் புரிபவராக இருந்தால், அத்தகைய மீனவர் இத்திட்டத்தின்கீழ் பயனாளியாக இருக்க தகுதியற்றவராவார்.

3) மேலே பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் முழு நேர மீன்பிடிப்பு தொழில், மீன் சில்லரை விற்பனை மற்றும் மீன்பிடி உபதொழிலில் ஈடுபட்டிருக்கும் கடல் மீனவ மகளிருக்கும் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்தினை 2006–07ம் ஆண்டிலிருந்து மாநிலத் திட்டமாக செயல்படுத்த முடிவு செய்து அரசாணைகள் வெளியிடப்பட்டது. பார்வை 2 மற்றும் 3ல் படிக்கப்பட்டுள்ள அரசாணையில் கடல் மீனவ மகளிருக்கான தேசிய சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்தினை செயல்படுத்துவதற்காக சந்தா தொகை மாதம் ரூ.75/– வீதம் வசூலிக்க அனுமதி வழங்கி ஆணையிடப்பட்டது.

4) இதனை தொடர்ந்து மேலே பார்வை 4ல் படிக்கப்பட்ட தமது கடிதத்தில் இத்திட்டத்தினை 2007–08ம் ஆண்டிலும் மாநில திட்டமாக 13 கடலோர மீனவ மகளிர்களுக்கு நிவாரணம் வழங்கிட அரசுக்கு கீழ்க்கண்டவாறு செலவினம் ஏற்படும் என்று மீன்துறை இயக்குநர் தெரிவித்துள்ளார்.

| | |
|---|---|
| மீனவ மகளிர் பயனாளிகளின் எண்ணிக்கை 105081 சந்தா தொகை மாதம் ஒன்றுக்கு ரூ. 75/– வீதம் 8 மாதங்களுக்கு 105081 x 75 x 8 = | ரூ. 6,30,48,600 |
| மாநில அரசின் பங்கு 50 சதவீதம் | ரூ. 6,30,48,600 |
| மொத்தம் | ரூ.12,60,97,200 |

(ரூபாய் பன்னிரெண்டு கோடியே அறுபது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூறு மட்டும்)

அதற்கான தொகை ரூ.12,60,97,200/– (ரூபாய் பன்னிரெண்டு கோடியே அறுபது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூறு மட்டும்) –க்கு அனுமதி வழங்குமாறு மீன்துறை இயக்குநர் அரசினை கேட்டுக்கொண்டுள்ளார்.

5) மீன்துறை இயக்குநரின் செயற்குறிப்பு அரசால் நன்கு பரிசீலிக்கப்பட்டது. முழு நேர மீன்பிடிப்பு தொழில், மீன் சில்லரை விற்பனை மற்றும் மீன்பிடி உபதொழிலில் ஈடுபட்டிருக்கும் 13 கடலோர கடல் மீனவ மகளிருக்கு சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்தினை 2007–08ம் ஆண்டிலும் மாநில திட்டமாக 105081 மீனவ மகளிருக்கு செயல்படுத்திட ரூ.12,60,97,200/– (ரூபாய் பன்னிரெண்டு கோடியே அறுபது இலட்சத்து தொண்ணூற்று ஏழாயிரத்து இருநூறு மட்டும்) –க்கு நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடப்படுகிறது.

6) மேலே பத்தி 5ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள தொகை கீழ்க்கண்ட புதிய கணக்குத் தலைப்பின்கீழ் பற்று வைக்கப்படும்.

"2405.00 Fisheries -800-other expenditure-II State Plan KD Scheme for Tamil Nadu Marine Fisherwomen during lean months – 11 Subsidies-01.Individual based subsidies (DPC 2405-00-800-KD-1111

7) மேலே பத்தி எண் 5ல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை பெற்று இத்திட்டத்தை செயல்படுத்த மீன்துறை இயக்குநர் சென்னை–6 அவர்களுக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.

8) இவ்வரசாணை நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது. அ.சா.கு.எண்.50910/AH&F/2007 நாள் 8.8.2007.

(ஆளுநரின் ஆணைப்படி)

லீனா நாயர்
சிறப்பு ஆணையர் மற்றும் அரசு செயலாளர்

<u>பெறுநர்</u>
மீன்துறை இயக்குநர், சென்னை–6.
மாநில கணக்காயர், சென்னை 18/18 (பெயரில்)
மாநில கணக்காயர், சென்னை 35/35 (பெயரில்)
சம்பள கணக்கு அலுவலர் (தெற்கு) சென்னை–35.
கருவூலம் ஆணையர் மற்றும் இயக்குநர், பனகல் பில்டிங், சென்னை–15.
<u>நகல்</u>
நிதி (க.ப.ம.மீ.) துறை, சென்னை–9.
திட்டம் வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மீன்வளத்துறை அமைச்சர் நேர்முக உதவியாளர் சென்னை–9.
கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலாளரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

சாலமிங்கம்
பிரிவு அலுவலர்